அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல:32/91(11)

எனது இலக்கம்: தா/iv/4/2-14
அரசாங்க, நிருவாக,உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்.
கொழும்பு-07.
1998 மார்ச் 24 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்,அரசாங்க அதிபர்கள் ,

மாகாணசபைகளின் அரச அதிபர்கள் ,

ஆளுநர்களின் செயலாளர்கள் ,

மாகாண ஆளுநர் சேவையின் ,
செயலாளர்கள் யாவருக்கும்.

**உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக தமது பதவிகளை ராஜினாமாச் செய்த அல்லது கடமை லீவு பெற்றுதேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அரசியல் உரிமைபெற்றுள்ள உத்தியோகத்தர்கள்**

1991.10.31 ஆந் திகதியையும் 32/91 (1) ஆம் இலக்கத்தையும் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கு மேலதிகமாக.

02. உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக தமது பதவிகளை ராஜினாமாச் செய்து/ லீவு பெற்றுக் கொண்டு தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அரசியல் உரிமை பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனுக்கிரகங்கள் அளிக்கப்படவேண்டுமென 98.02.18 ஆந் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

03. அவ்வாறான உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி சபையொன்றின் உபதலைவராக நியமனம் பெறுமிடத்து அல்லது அவ்வாறான பதவியொன்றில் பதில் கடமை புரியும் பொருட்டு நியமனம் பெறுமிடத்து உள்ளூராட்சி சபைச் செயலாளரினால் அதுபற்றி சம்பந்தப்பட்ட செயலாளருக்கு சம்பந்தப்பட்ட திகதிகள் சகிதம் உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும். அவ்வாறான பதவியொன்றுக்கு நியமனம் பெற்ற உத்தியோகத்தரும் தனது திணைக்களத் தலைவருக்கு தனிப்பட்ட முறையில் அறிவித்தல் வேண்டும். அவ்வாறான அறிக்கையொன்று கிடைக்கப் பெற்றதும் திணைக்களத் தலைவர் அவ் உத்தியோகத்தருக்கு சம்பந்தப்பட்ட முழுக் காலத்திற்குமான சம்பளமற்ற லீவை அனுமதிக்க வேண்டும்.

04. இந்த ஏற்பாடுகள் 1998.02.18 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்.

ஒப்பம்/டிகிஸன் நிலவீர
பதிற் கடமை புரியும் செயலாளர்
அரசாங்க, நிருவாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.

san/w/2